**O.S.No.163/2020**

**PW1 :ஜெகநாதன்** தேதி 23.02.2026

**வாசா1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தந்தை முத்துசாமியும், பிரதிவாதியின் தந்தை சுப்பிரமணியும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி என் சொந்த சித்தப்பா மகன். நான் தற்போது தொழில் எதுவும் செய்யவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ரிக் தொழில் செய்ததாக சொல்லியிருக்கிறேன், எந்த வருடம் வரை செய்தேன் என்றால் 1980 ல் இருந்து 2025 வரை ரிக் பொக்லைன் வைத்து தொழில் செய்தேன். டைகர் ரிக் சர்விஸ், டைகர் போர்வெல் சர்வீஸ் என்ற இரண்டு பெயர்களில் தொழில் செய்தேன். வருமானவரி தாக்கல் செய்கிறேன். வருமானவரி கணக்கில் எனக்கு வரக்கூடிய வருமானம், லாப நஷ்டம், நான் யார் யாருக்கு கடன் கொடுத்திருக்கிறேன், யார், யாரிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறேன் என்ற விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். வா.சா.2 ஜெய்சங்கர் என்னுடைய ஆடிட்டரா என்றால் இல்லை. 2017 ல் பிரதிவாதிக்கு இரண்டு தவணைகளில் ரூ.15 லட்சத்தை கடன் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், மேற்படி தொகையை என்னுடைய வருமானவரி கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கும், பிரதிவாதி குடும்பத்திற்கும் பாத்தியப்பட்ட சொத்தை 1984 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் கனகபுரம் கிராமம் ரீ.சர்வே எண்.189/4 என்ற காலையில் பிரதிவாதிக்கு வடபுரம் உள்ள 52 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்து ஒரு தாக்காகவும், அதே கிராமத்தில் ரீ.சர்வே எண்.368/1 காலையில் 3 ஏக்கர் 53 செண்ட் விஸ்தீரண பூமி ஒரு தாக்காகவும் ஒதுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட பூமிக்கு இணை பூமியை என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி குடியிருந்து வரும் ஈ.வி.என். ரோட்டில் உள்ள வீடு மேற்படி பாகப்பிரிவினையில் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஈ.வி.என். ரோட்டில் மொத்தம் 4 குடியிருப்பு வீடுகளும், ஒரு வணிக கடையும் உள்ளது

என்றால் சரிதான். அதில் ஒரு வீட்டில் பிரதிவாதி குடியிருந்து வந்து 3 வீடுகளை வாடகைக்கு விட்டும், வணிக கடையை வாடகைக்கு விட்டும் அனுபவித்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 3 வீடுகளிலிருந்தும், வணிக கடையிலிருந்தும் மாதம் ரூ.40000 வருமானம் வருகிறது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது, பொய். அந்த வீட்டிடம் ஈரோடு பிரதான இடத்தில் அமைந்துள்ள மதிப்புமிக்க இடம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி பெயர் பத்மலோஷினி என்றால் சரிதான். அவர்களுடைய பூர்வீகம் கோயம்புத்துரில் உள்ள கணபதி நகர் என்றால் சரிதான். அங்கு அவர்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டிடம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி ரிக் தொழில் செய்து வந்த விபரம் தெரியும். கனகபுரத்தில் பிரதிவாதி குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தரிசாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக விவசாய பூமியை வீட்டு மனையாக மாற்றம் செய்வதற்கு போதிய இடத்தை Reserved site ஆக விட்டு போக வர தேவையான இடத்தை ரோடுகளாக மாற்றம் செய்ய வேண்டும் என்பதால் குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பூமி தேவை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கனகபுரத்தில் ஒதுக்கப்பட்ட 52 செண்ட் பூமியை எத்தனை வருடங்களாக வீட்டு மனைகளாக மாற்றம் செய்ய முயற்சி செய்து வருகிறேன் கடந்த 4 வருடங்களாக முயற்சி செய்து வருகிறேன். எங்கள் பூமியை சேர்த்து வடபுரத்தில் உள்ள பிரதிவாதியின் 52 செண்டையும் சேர்த்து மனைநிலங்களாக மாற்றம் செய்ய பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. எனக்கு பாத்தியப்பட்ட 52 செண்ட்டை மட்டுமே கொண்டு மனையிடமாக மாற்றம் செய்ய இயலாதுஎன்றும், அதற்காக பிரதிவாதியின் பூமி 52 செண்ட்டையும் சேர்த்து மனையிடமாக மாற்றம் செய்ய அவரிடம் கேட்டு அதற்கு பிரதிவாதி சம்மதிக்காததால் 2016 முதல் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. ரூ.15 லட்சம் ரொக்கமாக பிரதிவாதிக்கு கடன் கொடுக்கப்பட்டதாக சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்து இருக்கிறேன். ரூ.15 லட்சம் கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை நான் கொடுத்தேனா என்றால் என் மகன் கொடுத்தாரா என்றால் நான் கொடுத்தேன். வா.சா.ஆ.8 என் மகன்

ராஜ்குமாரின் NRE statement of account என்றால் சரிதான். NRE account என்பது வெளிநாட்டில் உள்ள இந்தியர்கள் அவர்களுடைய சம்பள பணத்தை இந்திய ரூபாயில் மாற்றம் செய்து சேமித்து வைப்பது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் மகன் சம்பாதித்து வரும் சம்பளத்திற்கு தனிப்பட்ட முறையில் வருமானவரி கணக்கு செலுத்து வருகிறார் என்றால் சரிதான். என் மகனின் வங்கி கணக்கில் உள்ள அனைத்து தொகைகளும் அவருடைய தனிப்பட்ட வருமானம் என்று சொன்னால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட இந்த தனிப்பட்ட தொகையை நான் என்னுடைய தனிப்பட்ட தேவைக்கு எடுத்துக் கொள்ளவோ அல்லது அதை எடுத்து பிரதிவாதிக்கு கடனாக கொடுக்கவோ எழுத்துமூலமான அதிகாரம் எதுவும் ஆவணரீதியாக பெறவில்லை சரியல்ல, ஆவணம் உள்ளது. தனிப்பட்ட செலவுகளுக்கு என் மகன் எனக்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகனின் பணத்தை அவரது அதிகாரத்தின் பேரில் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன் என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மகனும் அவரது பணத்தை என் மூலமாக பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக அவரது வருமானவரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என் இரண்டு மகன்களும் திருமணத்திற்கு பின்னிட்டு சேலத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான், தற்போது குடியிருந்து வருகிறார்கள். நான் சொல்வது போல் 2025 ல் நான் ரிக் தொழில் எதுவும் செய்யவில்லை என்றும், எனக்கு எந்தஒரு தனிப்பட்ட வருமானமும் இல்லை என்றும், அதனால் தான் நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடன் விபரத்தை என்னுடைய வருமானவரி கணக்கில் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 12.03.2020 ல் அனுப்பிய வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி வா.சா.ஆ.5 23.03.2020 ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகளை அப்பொழுதே தெரிந்து கொண்டேன். அந்த பதில் அறிவிப்பில், என் அறிவிப்பில் கண்ட மாதிரி பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், நான் சொல்லியிருக்கும் இரண்டு புரோநோட்டுகள் சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றும், அதன் நகல்களை அனுப்பி வைக்குமாறும்

சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கை 08.07.2020 ல் தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு நாள் முன்னதாக அதாவது 07.07.2020 ல் இரண்டு புரோநோட்களின் புகைப்பட நகல்களை 4 மாதங்கள் கழித்து தாமதமாக அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். உண்மையிலேயே நான் சொல்லும் இரண்டு புரோநோட்டுகளும் அன்றைய தேதியிலேயே இருந்திருந்தால் உடனடியாக புகைப்பட நகல்களை அனுப்பியிருப்பேன் என்றும், தாவா புரோநோட்டுகளை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு நாள் முன்னதாக அதன் நகல்களை பிரதிவாதிக்கு அனுப்பி வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட் இரண்டிலும் சாட்சி கையெழுத்திட்டுள்ள ஜெய்சங்கர் என்பவர் என் சகோதரி மகன் என்றால் சரிதான். இரண்டு புரோநோட் எழுதி கொடுப்பதற்கு முன்னதாக பிரதிவாதி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பாக கேட்டார். தொகையை ஒரு தவணையில் கொடுத்தேனா அல்லது இரண்டு தவணையில் கொடுத்தேனா என்றால் இரண்டு தவணையாக கொடுத்தேன். நான் சாட்சியை அழைக்கவில்லை. புரோநோட் எழுதிய தேதியில் தான் சாட்சியை எனக்கு தெரிய வந்தது. புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. முதலில் பிரதிவாதி வந்த பிறகு சாட்சி வந்தாரா என்றால் பிரதிவாதியும், சாட்சியும் ஒன்றாக வந்தார்கள். ஒரே வண்டியில் வந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. வீட்டில் பிரதிவாதி, நான், சாட்சி ஆகியோர் மட்டும் இருந்தோமா என்றால் என் மனைவியும் இருந்தார். என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லாததால் அவர் வேறு ஒரு ரூம்மில் இருந்தார் என்றால் ஆமாம், சாட்சி பின்னிட்டு ஹாலில் இருந்தார். பிரதிவாதியும், சாட்சியும் வீட்டிற்கு வந்து போன விபரம் என் மனைவிக்கு தெரியாது என்றால் சரிதான். உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். என் வீட்டிற்கு பக்கத்து உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்கள் நிறைய பேர் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் நிறைய பேருக்கு கடன் கொடுத்திருக்கிறேன். புரோநோட் வழக்குகளும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நிறைய பேருக்கு கடன் கொடுப்பதால் வீட்டிலேயே புரோநோட் வைத்திருக்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் சொல்வது போல் வா.சா.ஆ.1 மற்றும் 2 புரோநோட்டுகள் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட புரோநோட்டுகள் அல்ல என்றும், அந்த தேதிகளில் அவர் ரூ.8 லட்சம் மற்றும் ரூ.7 லட்சம் கடனாக சாட்சி முன்னிலையில்

என்னிடம் பெறவில்லை என்றும், எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே உள்ள முன் கருத்து வேறுபாட்டினால் நான் என்னுடைய சகோதரியின் மகன் வா.சா.2 சாட்சியுடன் சேர்ந்து மோசடியாக இரண்டு வழக்கு புரோநோட்டுகளையும் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 2016 ல் இருந்து எங்கள் இரண்டு குடும்பத்தாருக்கும் இடையே போக்குவரத்து இல்லை என்றும், அந்த சூழ்நிலையில் பிரதிவாதி என்னிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கியதாகவும், அதற்கு புரோநோட் எழுதி கொடுத்தாக சொல்வது முற்றிலும் பொய் என்று சொன்னால் சரியல்ல. இந்த மாதிரி வழக்கு தாக்கல் செய்தால் அவர்களுடைய 52 செண்ட்டையும் கொடுத்து மனையிடமாக மாற்றிக் கொள்ள வருவார்கள் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ.15 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் எதுவும் இல்லை என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் என் மகனின் தொகையை நான் கொடுத்திருந்தால் என் மகனையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அதனால் இந்த வழக்கு பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவருக்கு நல்ல வருமானம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதியின் மகளின் திருமணத்திற்கு என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.